**தமிழ்நாடு அரசு**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : இந்திய தேசிய இயக்கம்

பகுதி : **பிரிட்டிஷ்க்கு எதிரான போராட்டங்கள் - 1857 புரட்சி**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# பிரிட்டிஷாருக்கு எதிரான கலகங்கள் மற்றும் போராட்டங்கள்

- 1857ஆம் ஆண்டிற்கு முன்பு வரை ஆங்கில ஆட்சிக்கு எதிராக புரட்சிகளையும், இயக்கங்களையும் நடத்தியவர்கள் சிறு ஆட்சியாளர்கள், பழங்குடித்தலைவர்கள், தென்னிந்திய பாளையக்காரர்கள் ஆவர்.
- இவர்கள் விவசாயிகள், மலைவாழ்மக்கள் மற்றும் தங்கள் போர் வீரர்கள் ஆதரவுடன் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.
- இந்த கலகங்கள் மற்றும் போராட்டங்களின் நோக்கம் ஆங்கிலேயர்களை தங்கள் பகுதிகளிலிருந்து விரட்டி விடுவது அல்லது முற்றிலும் ஒழித்து விடுவது ஆகும்.
- ஆட்சியை இழந்த இந்திய ஆட்சியாளர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவது இந்த கிளர்ச்சிகளின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.
- ஆனால் 1857 ஆம் ஆண்டிற்குப்பிறகு ஆங்கில ஆட்சியின் தன்மை மாறுபடவே குடியானவர்கள், மலைவாழ்மக்கள் மற்றும் தொழிலாளர்களின் போராட்டங்களின் தன்மை மாறுபட ஆரம்பித்தது. நில வருவாய் மதிப்பீட்டிற்கும் வரிவசூலிக்கும் புதிய கொள்கையை அறிமுகம் செய்தார்கள் ஆங்கிலேயர்களின் நிலத்தின் மதிப்பீடு அதன் விளைதிறன் அடிப்படையில் அமைந்திருந்தது. மேலும் நிலவரி பணமாக செலுத்தப்பட வேண்டியிருந்தது.
- நில விற்பனை, அடமானம், சொத்து மாற்றம் ஆகியவற்றிற்கும் பணம் தேவைப்பட்டது.
- இதனால் அனைத்து மக்களும் கடன் கொடுப்பவர்களை சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
- இந்த நிலக்குத்தகைப் பிரச்சனை விவசாயிகளுக்கும் நிலச்சுவான் தார்களுக்குமிடையே உள்ள உறவில் சிக்கலை ஏற்படுத்தியது.
- ஆங்கிலேயரின் இந்த புதிய விவசாயக் கொள்கையால் ஜமீன்தார்கள், ஆங்கில பிரதிநிதிகள், வட்டிக் கடைக்காரர்கள் ஆகியோர் பழங்குடியினர் பகுதிகளுக்கு சென்று, ஆங்கில அதிகார வர்க்கத்தின் ஆதரவுடன் பழங்குடி மக்களை சுரண்டினார்கள்.

- பழங்குடியினர் நிலமற்ற தொழிலாளர்களாகவும், கொத்தடிமை விவசாயிகளாகவும் மாறினர். இதனால் பழங்குடி மக்களின் சமுதாய வாழ்க்கை பாதிக்கப்பட்டது.
- காலப்போக்கில் ஏழ்மை நிலையடைந்த இந்த பழங்குடியினர் இறுதியில் ஆயுதம் ஏந்துவதை தவிர வேறு வழி இல்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர்.
- நிலசுவான்தார்களுக்கும், வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களுக்கும் பின்னணியில் பக்கபலமாக ஆங்கில அரசு இருப்பதை உணர்ந்த விவசாயிகள் மற்றும் பழங்குடியினர் இயற்கையாகவே போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனாலும் நவீன தொழில்நுட்பம், போர்த்தள வாடங்கள், ஆயுதங்கள் போன்றவற்றின் மூலம் பிரிட்டிஷார் கலகங்களை ஒடுக்கி வெற்றி பெற்றனர்.

| வ. எண் | இயக்கங்கள் / தலைவர்கள் | இடம் / ஆண்டு | தோன்ற காரணங்கள் மற்றும் செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1. | சாந்தால் எழுச்சி (Santhal Up rising)<br>**தலைவர்கள்:** மஞ்சி,தாபு கோஷர், சிதோ, கன்கு. | ஜார்கண்ட் (ராஜ்மஹால் மலைகள்) - 1854, 1855 - 56, 1872 - 82 | **காரணங்கள்:**<br>i) நிலக்குத்தகை உயர்வு, வட்டிக்கு கடன் கொடுப்பவர்களின் அடக்குமுறை<br>ii) ஜமீன்தார்கள், வருவாய் அதிகாரிகள், காவல்துறையின் அடக்குமுறையால் சாந்தால் மலைவாழ்மக்கள் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தனர். |
| 2. | சன்யாசி கலகம் (The Sanyasi Revolt) | வங்காளம் மற்றும் கிழக்கிந்தியா 1770 | சன்யாசி மலைவாழ் மக்களின் புனித தலங்களை பார்வையிட பிரிட்டிஷார் தடைவிதித்ததால் நடைபெற்றது. |
| 3. | சுவார் எழுச்சி (Chuar Uprising) | மதினாப்பூர் (வங்காளம்) 1766 - 1772, 1795 - 1816 | பஞ்சம் மற்றும் நிலவரி உயர்வுக்காக சுவார் மலை வாழ்மக்கள் நடத்திய எழுச்சியாகும். |
| 4. | ஹோ எழுச்சி (Ho Rising) | ஜார்க்கண்ட் சோட்டா நாக்பூர் பீட்பூமி 1820 - 22, 1831 - 37 | பிரிட்டிஷார் மற்றும் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் மற்றும் இடைத்தரகர்களால் கோபமடைந்த சோட்டாநாக்பூர் பீட்பூமியின் ஹோ மற்றும் முண்டா மலை வாழ் மக்கள் நடத்திய |

| | | | |
|---|---|---|---|
| | | | போராட்டமாகும். |
| 5. | கோல் கலகம் (Kol Mutiny) | ஜார்கண்ட் 1831 | சீக்கியர்கள் மற்றும் முஸ்லீம்கள் நிலங்களை பெற்று இங்கு குடியேறியதால் கோபமடைந்த சோட்டா நாக்பூர் பீட்பூமி கோல் மக்கள் இந்த கலகத்தை நடத்தினர். |
| 6. | கந்த் எழுச்சி (Kandh Upring)<br>**தலைவர்: சக்ரா பிசாய்** | பாட்னா 1837 - 56 | கந்த் மலைவாழ்மக்களின் மனிதர்களை பலியிடும் பழக்கத்திற்கு (Human Sacrifice - Mariah) பிரிட்டிஷ் எதிர்ப்பு தெரிவித்து தடுத்ததால் கந்த் மக்கள் பிரிட்டிஷாருடன் போரிட்டனர். |
| 7. | அகோம் கலகம் (Ahom Revolt)<br>**தலைவர்: கோம்தார் கோன்வார்** | அஸ்ஸாம் 1828 | முதல் பர்மிய போருக்கு (1824 - 26) பிறகு அகோம் மலை வாழ் மக்களின் அஸ்ஸாம் பகுதியிலிருந்து வெளியேறுவதாக உறுதி அளித்த பிரிட்டிஷ், வெளியேறுவதற்கு பதிலாக மேலும் பல பகுதிகளை கூடுதலாக அபகரிக்கவே கலகம் நடைபெற்றது. |
| 8. | காசி எழுச்சி (Khasi Uprising)<br>**தலைவர்: திரத் சிங்** | மேகாலயா (காசி மலைகள்) - 1830 | காசி மலைப் பகுதியில் சாலை ஏற்படுத்த பிரிட்டிஷார் முயன்றனர். அதற்காக வேலை செய்வதற்காக வங்காளிகள், வெளி ஆட்கள் போன்றோரை கொண்டுவரவே காசி மலைவாழ் மக்கள் கோபமடைந்து சண்டையிட்டனர். |
| 9. | பாகல் பந்திக்கள் (Pagal Panthis)<br>**தலைவர்: கரம்ஷா, அவரது மகன் திப்பு** | வங்காளம் 1820 | குத்தகைத்தாரர்கள் மற்றும் ஜமீன்தார்களின் அடக்கு முறைக்கு எதிராக வங்காளத்தின் வடக்கு மாவட்டத்தின் ஒரு மதக்குழு (பாகல் பந்திக்கள்) ஏற்படுத்திய போராட்டமாகும். |
| 10. | பரைசி கலகம் (Faraizi Revolt)<br>**தலைவர்கள்:**<br>**ஹஜி ஷரியத் அல்லா,** | கிழக்கு வங்காளம் 1838 -57 | ஜமீன்தார்கள், ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிழக்கு வங்காள முஸ்லீம்களின் போராட்டமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | **அவரது மகன் துது மியான்** | | |
| 11. | பில் எழுச்சி (Bhil Uprisings) **தலைவர்: கேவாரம்** | மேற்கு இந்தியா 1817 - 19, 1825 - 46 | ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக நடத்தப்பட்ட எழுச்சியாகும். |
| 12. | ராமோசி எழுச்சி (Ramusi Rising) **தலைவர்: சித்தூர் சிங்** | மேற்கு தொடர்ச்சி மலைகள் 1822 - 29 | பிரிட்டிஷாரின் நிர்வாகத்திற்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டமாகும். |
| 13. | முண்டா எழுச்சி (Munda Revolt) **தலைவர்: பிர்சா முண்டா** | ஜார்கண்ட் சோட்டாநாக்பூர் 1890 -1900 | ஆங்கில நிர்வாகிகள் ஜமீன்தார்கள் மற்றும் வட்டிக்காரர்களின் அடக்குமுறைக்கு எதிராக நடந்த எழுச்சியாகும். |
| 14. | சூரத் உப்பு கிளர்ச்சி (Surat Salt Agitation) | சூரத் 1844 | உப்பு வரி 50 பைசாவிலிருந்து 1 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டதால் நடத்தப்பட்ட கிளர்ச்சியாகும். |
| 15. | தக்காண விவசாயிகள் எழுச்சி (Peasant Uprising of Deccan) | தக்காணம் (பூனே, அகமது நகர்) 1875 | இரயத்துவாரி முறையால் நிலவரி உயர்த்தப்படுதல் மற்றும் இடைத்தரகர்களின் அடக்குமுறையால் நடத்தப்பட்டது. |
| 16. | விஜயநகரம் ராஜாவின் எழுச்சி (Revolt of Raja of Vizianagaram) | வட சர்க்கார் 1765 | ஆங்கிலேயரின் நில ஆக்கிரமிப்பு, அன்பளிப்பு வேண்டுதல் மற்றும் படைகளை கலைக்க வற்புறுத்தியதால் விஜயநகர ராஜா கலகத்தில் ஈடுபட்டர். |
| 17. | போலிகர்கள் கலகம் (Poligars Revolt) | திண்டுக்கல் மற்றும் மலபார் 1801 1856 | ஆங்கிலேயரின் அடக்குமுறை நிலவரித் திட்டத்திற்கு எதிராக திண்டுக்கல் மற்றும் மலபாரைச் சேர்ந்த போலீகர்கள் நடத்திய போராட்டமாகும். |
| 18. | திவான் வேலுத்தம்பி கலகம் (Divan Velu Rampi’s Revollt) | திருவிதாங்கூர் 1805 | வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் மற்றும் அதிக நிலவரிக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டார். |
| 19. | ரம்பா கிளர்ச்சி (Rampa Revolt) **தலைவர்: அலூரி சீதாராமராஜூ** | கடலோர ஆந்திரம் 1879, 1922 -24 | புதிய காடுகள் ஒழுங்குமுறை திட்டம் மற்றும் ஆங்கிலேய வருவாய் துறை அதிகாரிகளின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராக நடைபெற்றது. |

| | | | |
|---|---|---|---|
| 20. | குகா கலகம் (Kuka Revolt) **தலைவர்கள்:** பகத் ஜவஹர் மால் அல்லது சியான் சாகேப், ராம்சிங் | மேற்கு பஞ்சாப் 1840 | பஞ்சாப் இணைப்பிற்கு பிறகு அடக்குமுறை ஆங்கிலேயரின் செயல்பாடுகளுக்கு எதிராக நடைபெற்றது. ஆரம்பத்தில் இது ஒரு சீக்கிய மதச்சீர்த்திருத்த அமைப்பாகும். |
| 21. | அவுரி புரட்சி (Indigo Revolt) **தலைவர்கள்:** **திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஷ்ணு பிஸ்வாஸ்** | வங்காளம் 1859 - 60 | இங்கிலாந்து வணிகர்கள் அவுரி சாயச் செடியை கட்டாயமாக்கி விளைவிக்கக் கூறியதால், அதற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட புரட்சியாகும். |
| 22. | பாப்னா விவசாய லீக் | கிழக்கு வங்காளம் 1870 -80 | ஜமீன்தார்களின் நிலவரி உயர்த்துதல் அடக்கு முறைகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட போராட்ட அமைப்பாகும். |
| 23. | கிசான் சபை இயக்கம் (The Kisan Sabha Movement) **தலைவர்:** **கௌரி சங்கர் மிஸ்ரா, இந்திரா நாராயணன் திவிவேதி, பாபா ராம்சந்திரா, துர்காபால் சிங்** | உத்திரப்பிரதேசம் (அ) ஒன்று பட்ட மாகாணம் 1918 | பெரிய நிலச்சுவான்தார்களின் அதிக நிலவரி காலி செய்தல் போன்ற அடக்கு முறைகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இயக்கமாகும். 1920ல் பாபா ராம் சந்திராவின் வேண்டுகோளுக் கிணங்க நேரு வருகை புரிந்து போராட்டத்தில் கலந்து கொண்டார். |
| 24. | எகா இயக்கம் (Eka Movement) **தலைவர்:** **மாதாரி பாஸி** | உத்திரப்பிரதேசம் 1921 | அதிக நிலவரி, வரி வசூலிப்பவர்களின் அடக்கு முறையால் ஆரம்பிக்கப்பட்டது. |
| 25. | மாப்பிளாக்கள் கலகம் (Mappila Revolt) | மலபார் (கேரளா) 1836 -1855<br>1873 - 1885<br>1894 - 96<br>1920 - 21 | மலபார் பகுதியிலிருந்த தீவிரவாத முஸ்லீம் குத்தகைதாரர்கள் மாப்பிளாக்கள் ஆவார். இந்து ஜமீன்தார்களின் நிலவரி உயர்வு அடக்குமுறைகளுக்கெதிராக நடத்தப்பட்ட கலகமாகும். |
| 26. | பர்தோலி சத்யாகிரகம் (Bardoli Satyagraha) **தலைவர்கள்:** **சர்தார் வல்லபாய் படேல்** | பர்தோலி தாலூகா - சூரத் 1928 | நிலவருவாய் 30% உயர்த்தப்பட்டதற்கு எதிராக நடத்தப்பட்ட சத்யாகிரகமாகும். |

| | | | |
|---|---|---|---|
| 27. | அகில இந்திய கிசான்சபை /காங்கிரஸ் The All India Kisan Sabha / Congress **தலைவர்:சுவாமி ஷாஜானந்த சரஸ்வதி** **பொதுசெயலாளர்: N.G. ரங்கா** | லக்னோ 1936 | விவசாயிகளின் குறைபாடுகளை போக்கவும், போராட்டம் நடத்தி அரசிடம் நீதி பெறவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. **இதன் பத்திரிக்கை:** இந்துலால் யாக்னிக் (Indulal Yagnik) 1933ல் N.G ரங்கா, ஆந்திராவில் இந்திய விவசாயிகள் நிறுவனத்தை (The India's Peasant's Institute) ஏற்படுத்தினார். |
| 28. | தெபாகா இயக்கம் (Tebhaga Movement) | வங்காளம் 1946 | 1946 ல் வங்காள மாகாண கிசான் சபா - பிளட்குழுவின் (Flood Commission) பரிந்துரையான "மூன்றில் இரண்டு பங்கு விளை பொருளை நிலத்தை உழுபவர்களுக்கு கொடுக்க வேண்டும்" என்பதை நடைமுறைப்படுத்த வேண்டி போராட்டம் நடைபெற்றது. |
| 29. | தெலுங்கானா இயக்கம் (Telungana Movement) **தலைவர்: சுந்தரய்யா** | ஆந்திரம் 1947 -48 | ஹைதராபாத் நிஜாமுக்கு எதிராக மக்கள் மற்றும் கம்யூனிஸ்டுகளின் ஆயுதமேந்திய கொரில்லா போராட்டமாகும். 3000 கிராமங்களை பாதித்த பெரிய போராட்டமாகும். |

**2. தொழிலாளர் போராட்டங்கள்**

**(The movement of the working class):**

❖ இந்தியாவில் 19-ஆம் நூற்றாண்டில் நவீன தொழிற்சாலைகள் உருவாக ஆரம்பித்தன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ரயில்வேக்களிலும் நவீன தொழிற்சாலைகளிலும் பருத்தி மற்றும் நிலக்கரி தொழிற்சாலைகளிலும் சணல் தொழில் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய ஆரம்பித்தனர்.

**இந்திய தொழிலாளர்களின் பிரச்சனைகள்:**

1. குறைவான ஊதியம்
2. நீண்ட வேலை நேரங்கள்
3. சுகாதாரமின்மை
4. அபாய வேலைகள்
5. குழந்தை தொழிலாளர்கள்
6. அடிப்படை வசதிகள் இன்மை.

மேற்குறிப்பிட்ட இந்திய தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு அரசிடம் போராடவும், தீர்வு பெறவும் பல்வேறு அமைப்புகள் தோன்றின.

- ❖ சசிபதா பானர்ஜி (Sasipada Banerjea) என்பவர் தொழிலாளர் கிளப்பையும் (Working men's Club) பாரத் ஷிரம்ஜீவி (Bharat Shramhjeevei) என்ற பத்திரிக்கையையும் 1870 ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.
- ❖ 1880 ஆம் ஆண்டு நாராயண் மெகாஜி லோக்காண்டே என்பவர் தீனபந்து என்ற பத்திரிக்கையையும், பம்பாய்மில் மற்றும் மில் ஹேண்ட் (Mill Hands) கூட்டமைப்பையும் ஏற்படுத்தினார்.
- ❖ திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரம்பிள்ளை மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகியோர் தொழிலாளர் நலனுக்காக போராடி சிறை சென்றனர்.
- ❖ அகில இந்திய அளவில் தொழிலாளர் நலனுக்காக போராட N.M. ஜோஷி என்பவர் அக்டோபர் 31 1920ல் அகில இந்திய வாணிப யூனியன் காங்கிரஸை (All India Trade Union Congress) ஏற்படுத்தினார். அதன் முதல் தலைவராக அந்த ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவரான லாலா லஜபதி ராய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.AITUC யின் முதல் பொதுச் செயலாளராக திவான் சாமென் என்பவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ❖ 1929ல் முஜாபர் அகமது S.A. டேன்ஜ், ஜோக்லேக்கர், பிலிப் சௌகத் உஸ்மானி போன்ற 31 தொழிலாளர் தலைவர்களை மீரட் சதி வழக்கில் (1929) அரசு குற்றம் சாட்டி கைது செய்தது. இது தொழிலாளர் போராட்டங்களை வலுவிலக்க செய்தது.
- ❖ சுதந்திரத்திற்கு பிறகு தொழிலாளர் போராட்டங்கள் அரசியல் அடிப்படையில் வலுப்பெற்றன.

## 1. வேலூர் கலகம் (Vellore Mutiny 1806):

- ❖ தமிழ்நாட்டின் முந்தைய வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரம் வேலூர். தற்போது வேலூர் மாவட்டம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. 1806 ல் வேலூரிலிருந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

### காரணங்கள் (causes)

- ❖ மதராஸின் ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் அனுமதியோடு படைத்தளபதி சர் ஜான் கிரடாக் என்பவர் தலைப்பாகையுடன் கூடிய புதிய சீருடையை அறிமுகப்படுத்தினார்.

இந்த தலைப்பாகை ஐரோப்பிய தொப்பியைப் போலவே இருந்தது. காதணிகளை அணிவதும், சமய சின்னங்களை இட்டுக் கொள்வதும் தடை செய்யப்பட்டன.

- மேலும் சிப்பாய்கள் தங்கள் முகத்தை நன்றாக மழித்து, மீசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்று விதிக்கப்பட்டனர். ஆனால் இந்த நடவடிக்கைகளை தங்களது சமய மற்றும் சமூகப்பழக்கவழக்கங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாக சிப்பாய்கள் கருதினார்கள். மேலும் அனைவரையும் கிறித்துவ சமயத்திற்கு மாற்றும் முயற்சிக்கு இது முன்னோடி என்ற கருத்து பரவியது.
- ஜூன் 17-ம் தேதி 1806 ஆம் ஆண்டு முதலாம் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய் முஸ்தபா பெக் தன் உயர் அதிகாரி கர்னல் போர்ப்ஸிடம், ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளையும் துருப்புகளையும் பூண்டோடு அழிப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார். ஆனால் அவரது செய்திக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை.
- வேலூர் கலகம் உருவாவதற்கு முன்பு முன்பு திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் மற்றும் மொய்சுதீன் ஆகிய இருவரும் இணைந்து திட்டம் தீட்டினர். மீண்டும் முஸ்லீம் ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக வேலூர்கலகம் நடைபெற்றது. புலித்தேவர், கான்சாகிப் கட்டபொம்மன் மருது சகோதரர்கள், திப்பு சுல்தான் போன்றோருக்கு ஏற்பட்ட நிலையால் கசப்புணர்வு கொண்ட சிப்பாய்கள் வேலூர் கலகத்தின் ஈடுபட்டனர்.

**கலகத்தின் போக்கு (Course):**

- ஜூலை 10 ம் நாள் விடியற்காலை 1 மற்றும் 23ம் படைப்பிரிவை சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர். இப்படைப் பிரிவுகளின் இராணுவ அதிகாரி கர்னல் பான் கோர்ட் முதலில் பலியானார். 23ம் படைப் பிரிவின் இராணுவ அதிகாரியான கர்னல் மி கேரஸ், அணி வகுப்பு மைதானத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டார். அடுத்து கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஆம்ஸ் ட்ராங் ஆவார். ஏறத்தாழ 12க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.
- வேலூர் கோட்டைக்கு வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் 14 மைல்களுக்கு அப்பாலுள்ள இராணிப்பேட்டைக்கு விரைந்து

சென்று அங்கிருந்த இராணுவத்தளபதி கர்னல் ஜில்லஸ்பியிடம் காலை 7 மணியளவில் வேலூர் புரட்சியைப் பற்றி தகவல் தெரிவித்தார். சுமார் காலை 9 மணியளவில் ஜில்லஸ்பி இராணுவப்படையுடன் வேலூர் கோட்டையை அடைந்தார்.

❖ அதற்குள் கிளர்ச்சியாளர்கள் திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதரை புதிய சுல்தானாக அறிவித்து திப்பு சுல்தானின் புலிக்கொடியையும் பறக்க விட்டனர். ஆனால் இக்கிளர்ச்சி கர்னல் ஜில்லெஸ்பியினால் உடனடியாக அடக்கப்பட்டது. கோட்டைக்குள் மட்டும் 800 இந்திய சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். திருச்சியிலும் வேலூரிலும் 600 சிப்பாய்கள் சிறைப்படுத்தப்பட்டனர். சிலர் தூக்கிலிடப்பட்டனர். இறுதியாக திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். படைத்தளபதியும், சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப் பட்டனர். முறையாக திட்டமிடப்படாததால் வேலூர் கலகம் தோல்வியில் முடிந்தது.

**மதிப்பீடு:**

❖ 1857 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திரப் போருக்கு வேலூர் கலகம் முன்னோடி என்று சவார்க்கர் கருதுகின்றார்.

❖ ஆனால் வேலூர்க்கலகம் 1857 ம் ஆண்டு சிப்பாய் கலகத்திற்கு வழி வகுத்தது என்ற கூற்றை கே.கே. பிள்ளை என்ற வரலாற்று ஆசிரியர் மறுக்கிறார்.

❖ இந்திய விடுதலைக்கு தமிழர்களே முன்னோடிகளாக திகழ்ந்தனர் என்று சஞ்சீவி கூறியுள்ளார்.

❖ காலனியாதிக்கத்தை எதிர்த்து மருது சகோதரர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே வேலூர் கலகம் என்று கே. ராசய்யன் என்ற வரலாற்று அறிஞர் கருதுகிறாா.

**முக்கியமான விவசாயி இயக்கங்கள் மற்றும் சங்கங்கள்**

| இயக்கங்கள் மற்றும் வருடம் | பிராந்தியம் | தலைவர் | குறிக்கோள் |
|---|---|---|---|
| பாகல் பன்டிஸ் இயக்கம் | வங்காளம் | குரம்ஷா மற்றும் திப்பு ஷா | வாடகை உயர்வு வன்முறையாக நசுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| மும்பா எழுச்சிகள் | முலபார் | குமாஹம்மத் ஹொசி மற்றும் ஏலி மியூஸலிஜியர் | வருவாய் கோரிக்கை மற்றும் கன அளவு குறைப்பு ஆகியவற்றிற்கு எதிராக |
| இண்டிகோ ரெவல்லட் | நாடியா | டிகம்பார் மற்றும் பிஷ்னு பிள்வாஸ் | ஐரோப்பிய இன்டிகோ கமிஷன் (1860) விதிக்கப் பட்ட விதிகளுக்கு எதிராக நிலைமைகளைக் காண அமைக்கப் பட்டுள்ளது. |
| பாட்னா அகரியன் எழுச்சி (1872) | பாட்னா மாவட்டம் கிழக்கு வங்காளம் | சுாஷ சந்திப் ராய் சம்பு பால், கோடி முல்லா மற்றும் B.C சாட்டர்ஜி RC தத் | ஆக்கிரமிப்பாளர்களை உரிமையாக்குவதைத் தடுப்பதற்காக ஜமீன்தாரர்களின் கொள்கை களுக்கு எதிராக, பெங்கால் குடியுரிமைச் சட்டம் இயற்றப் பட்டது. |
| பூனா சர்வஜெனிக் சபா (1870) | தானா மாவட்டம் கொலம்பா மற்றும் ரத்னகிரி | M.C. ரானடே | விவசாயிகள் சட்ட உரிமைகளை பிரபலப்படுத்துவதற்கு |
| சம்பரன் (Sampran) சத்யாகிரகா (1917) | சம்பரன், பீஹார் | விவசாயிகள் | ஐரோப்பிய இண்டிகோ ஆலைகளால் சுமத்தப்பட்ட டிங்கிஸ்டா அமைப்புக்கு எதிராக சம்பரான் சட்டம் திங்கதியா முறையை ஒழித்தது. |
| கேடா (Kheda) சத்தியாகிரகம் (1918) | கேடா, குஜராத் | காந்தி, விவசாயிகள் | பயிர் செயலிழப்பு வழக்கில் நில வருவாயைக் குறைப்பதற்காக புறக் கணிக்கப் பட்ட முறையீடு களுக்கு எதிராக கோரிக்கை இறுதியாக நிறைவேற்றப்பட்டது. |
| U.P. கிஷான் சபா | | மதன்மோகன் மாலவியா மற்றும் இந்திரா நரேன் | |
| ஆவத் விவசாயிகள் இயக்கம் (1918) | பிரெய்லி பிரதப்கர்க் | | |

| | | | |
|---|---|---|---|
| உத் கிஷான் சபா (1920) | உத் | நேரு மற்றும் பாபா ராம் சந்திரா | |
| ஆந்திரா விவசாயிகளின் சங்கம் (1928) | ஆந்திரா | N.G. ரங்கா | ஜமின்தார் முறையை ஒழிக்க ஒப்புக் கொள்ளுதல் |
| ஆல் இந்தியா கிஷான் சபா (1936) | | சுவாமி சகாஜனந்தா | பொருளாதார சுரண்டல் இருந்து விவசாயிகள் பாதுகாப்பு |